# தரம் 12,13

# தவணை - 1

# எழுத்தியல்




ஆசிரியர்
திருமதி. பிரேமலா தங்கரூபன்
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

அ

ட்

# எழுத்து

கா

ஃ

எழுத்து என்னும் சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும், அவ்வொலிக்குரிய வரிவடிவத்தை குறிக்கவும் பயன்படுகிறது.

ம

வி

சா

எ

த்

**எழுத்து**
- **ஒலி வடிவம்**
- வரி வடிவம்

**ஒலி வடிவம்** — **எழுத்தை உச்சரிக்கும் போது எழும் ஒலி**

வரி வடிவம் — **எழுத்து எழுதப்படும் வடிவம்**

க
- **அ** ஒலி வடிவம் ( உயிர் )
- **க்** வரி வடிவம் ( மெய் )

# தரம் 12,13 தமிழ் எழுத்தியல் எழுத்துக்களின் வகை,ஒலிப்பு முறை

## எழுத்துக்களின் வகைகள்

முதல் எழுத்து

(மொழியின் அடிப்படை எழுத்துக்கள்)

உயிர் - 12
மெய் - 18
30

சார்பெழுத்து

1. உயிர் மெய்
2. முற்றாயுதம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6. குற்றியலிகரம்
7. “ஐ” காரக் குறுக்கம்
8. “ஔ” காரக் குறுக்கம்
9. “ம” கரக் குறுக்கம்
10. ஆய்தக் குறுக்கம்

## உயிர் எழுத்தின் வகைப்பாடு

உயிர் எழுத்துக்கள்

குறில் எழுத்துக்கள் ( 1 மாத்திரை )

குறுகிய ஓசை உடையவை
அ , இ , உ , எ , ஒ

நெடில் எழுத்துக்கள் ( 2 மாத்திரை )

நெடிய ஓசை உடையவை
ஆ , ஈ , ஊ , ஏ , ஐ , ஓ , ஔ

# உயிர் எழுத்து ஒலிக்கும் முறை

**இதழ் குவிந்த உயிர்**

உச்சரிக்கும் போது இதழ் குவிதல்

உ, ஊ, ஒ, ஓ, ஔ

**இதழ் குவியா உயிர்**

உச்சரிக்கும் போது இதழ் குவியாதிருத்தல்

அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ

# உயிர் எழுத்து ஒலிக்கும் முறை

- **முன் உயிர்** — நாக்கின் முன் பகுதி விறைப்படைதல் இ, ஈ, எ, ஏ
- **பின் உயிர்** — நாக்கின் பின் பகுதி விறைப்படைதல் உ, ஊ, ஒ, ஓ
- **இடை உயிர்** — நாக்கின் நடுப்பகுதி விறைப்படைதல் அ, ஆ

தரம் 12,13 தமிழ் எழுத்தியல் எழுத்துக்களின் வகை,ஒலிப்பு முறை

# உயிர் எழுத்து ஒலிக்கும் முறை

- **மேல் உயிர் -**
  - உச்சரிக்கும் போது நாக்கு மேல் நோக்கி எழுதல் இ, ஈ, உ, ஊ
- **கீழ் உயிர் -**
  - உச்சரிக்கும் போது நாக்கு கீழ் நோக்கி தாழ்தல் அ, ஆ
- **நடு உயிர்**
  - -உச்சரிக்கும் போது நாக்கு நடு நிலையில் நிற்றல் எ, ஏ, ஒ, ஓ

## உயிர் எழுத்துக்களின் உச்சரிப்பு

| உச்சரிப்பு முறை | குறில் | நெடில் |
|---|---|---|
| மேல் முன் உயிர் | இ | ஈ |
| நடு முன் உயிர் | எ | ஏ |
| மேல் பின் உயிர் | உ | ஊ |
| நடு பின் உயிர் | ஒ | ஓ |
| கீழ் இடை உயிர் | அ | ஆ |

## உயிர் எழுத்துக்களின் உச்சரிப்பு முறை – விசேட நிலைமைகள்
( இ, ஈ, எ, ஏ, உ )

இ - இது , இலை
ஈ - ஈசல் , ஈயம்
எ – எலி , எருது
ஏ – ஏலம், ஏன்

முன் உயிர்

## உயிர் எழுத்துக்களின் உச்சரிப்பு முறை – விசேட நிலைமைகள்

( இ,ஈ,எ,ஏ,உ **அடுத்து** ட்,ண்,ள்,ழ்,உயிர் ஏறிய ற கரம்)

இ - இடம் , இளமை
ஈ - ஈழம், ஈடு
எ – எட்டு, எள்ளு
ஏ – ஏழு, ஏணி

இடை உயிர்

# உகரம் ஒலிப்பு முறை

**குற்றியலுகரம்**
இதழ்குவியாத உகரம்
**பாக்கு, பட்டு , எழுத்து**

**முற்றியலுகரம் -**
**இதழ் குவிந்த உகரம்**
**குடல் , புல், உமி**

# மெய் எழுத்துக்களின் ஒலிப்பு முறை மரபு இலக்கணம்

## வல்லினம்

க், ச், ட்

த், ப், ற்

## மெல்லினம்

ஞ், ங், ண்

ந், ம், ன்

## இடையினம்

ய், ர், ல், வ், ள், ழ்

# மெய் எழுத்துக்களின் ஒலிப்பு முறை –மொழியியலாளர்

| | ஈரிதழ் | உதடட்டுப் பல் | பல் | நுனி அண்ணம் | வளை நா | அண்ணம் | கடையண் ணம் |
|---|---|---|---|---|---|---|---|
| வெடிப்பொலி | ப் | | த் | ற் | ட் | ச் | க் |
| மூக்கொலி | ம் | | ந் | ன் | ண் | ஞ் | ங் |
| மருங்கொலி | | | | ல் | ள் ழ் | | |
| வருடொலி | | | | ர் | | | |
| ஆடொலி | | | | ( ற ) | | | |
| அரை உயிர் | | வ் | | | | ய் | |

## மெய் எழுத்துக்களின் ஒலிப்பு முறை –விசேட நிலைமை
## வல்லின மெய் ஆறும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலிப்பு உடையன

க், ச், ட், த், ப், ற்

**க கரம், ச கரம் மூன்று விதமாக ஒலிக்கப் படுகிறது**

| | | | |
|---|---|---|---|
| கடல் | k | சட்டி | s |
| பகல் | h | பஞ்சம் | j |
| தங்கம் | g | கட்சி | ch |

## ஒரே வகையாக உச்சரிக்கப்படும் மெய் எழுத்துக்கள்

ந கர, ன கரங்கள்

- ந கரம் சொல் முதலில் வரும் ன கரம் சொல் முதலில் வராது
  நகம் , நோன்பு

- ன கரம் சொல் இறுதியில் வரும் ந கரம் சொல் இறுதியில் வராது
  மான் , நான் , இருந்தேன்

- சொல் இடையில் இரண்டும் இடம்பெறும்
  வந்தான் மனிதன்

# ழ கர ,ள கரங்கள்

**ழ கரத்துக்கு** பதிலாக **ள கரம்** இடம் பெறும் போது பொருள் வேறுபடும் சொற்கள் உண்டு.

**வாழ் வாள்**
**கிழி கிளி**

**சொல் இடையில் ழ கரம் இரட்டிப்பதில்லை.**
**பழம்**

**சொல் இடையில் ள கரம் இரட்டித்து வரும்**

**வள்ளம் - வ ள் ள் அ ம்**

**வெள்ளி - வெ ள் ள் இ**

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

**இடை உயிராக இ கரம் ஒலிக்கப்படும் சொல்**

(1) இது (2) இனி
(3) இலை (4) இறகு
(5) புலி

இது

இனி

இலை

இறகு

புலி

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

### கூட்டுயிர் எழுத்துக்கள்

(1) ஐ,ஔ (2) வ்,ய் (3) அ,ஆ

(4) எ,ஒ (5) ஏ,ஓ

ஐ,ஔ

வ்,ய்

அ,ஆ

எ, ஒ

ஏ,ஓ

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

**சொல் இறுதியில் உ கரம் இதழ் குவிந்து ஒலிக்கப்படுவது**

(1) சுவை (2) துடை (3) <u>இரவு</u>

(4) உயரம் (5) உரல்

சுவை

துடை

இரவு

உயரம்

உரல்

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

**ச கரத்தின் மாற்றொலியாக அமைவது**

(1) கட்சி (2) பயிற்சி (3) தேர்ச்சி

(4) பச்சை (5) மஞ்சள்

கட்சி

பயிற்சி

தேர்ச்சி

பச்சை

மஞ்சள்

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

**மொழி முதலில் இடம் பெறும் எழுத்து**

(1) ந கரம் (2) ன கரம் (3) ண கரம்

(4) ல கரம் (5) ழ கரம்

ந கரம்

ன கரம்

ண கரம்

ல கரம்

ழ கரம்

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

**சொல் இடையில் இரட்டித்து வராத எழுத்து**

(1)ள கரம் (2) ச கரம் (3) த கரம்

(4) ழ கரம் (5) க கரம்

ள கரம்

ச கரம்

த கரம்

ழ கரம்

க கரம்

# இடைவெளி நிரப்புக

உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டு ஒலிகளை குறிக்கும் எழுத்து உயிர் மெய் ..எனப்படும்.

ஒற்றளபெடை

உயிரளபெடை

ஒன்று

கால் மாத்திரை

உயிர் மெய்

# இடைவெளி நிரப்புக

ஆய்த எழுத்தின் மாத்திரை அளவு

அரை மாத்திரை

……………………ஆகும்

ஒற்றளபெடை

உயிரளபெடை

ஒன்று

அரை மாத்திரை

உயிர் மெய்

# இடைவெளி நிரப்புக

தெய்வம் தொழாஅள் இங்கு இடம் பெற்ற

அளபெடை உயிரளபெடை ……………….ஆகும்

ஒற்றளபெடை

உயிரளபெடை

ஒன்று

கால் மாத்திரை

உயிர் மெய்

# இடைவெளி நிரப்புக

ஐ காரக் குறுக்கத்தின் மாத்திரை

அளவு ஒன்று ஆகும்.

ஒற்றளபெடை

உயிரளபெடை

ஒன்று

கால் மாத்திரை

உயிர் மெய்

# இடைவெளி நிரப்புக

ஒரு எழுத்து நீண்டு ஒலிப்பதற்கு அடையாளமாக அதே எழுத்து அருகில் இடம் பெறல் ஒற்றளபெடை ………………..எனப்படும்.

ஒற்றளபெடை

உயிரளபெடை

ஒன்று

கால் மாத்திரை

உயிர் மெய்

# தொடர்பு படுத்துக

- ஐ காரக் குறுக்கம்
- ஔகாரக் குறுக்கம்
- மகரக் குறுக்கம்
- ஆய்தக் குறுக்கம்
- குற்றியலுகரம்
- குற்றியலிகரம்

- ஔடதம்
- செய்து
- நாகியாது
- பஃ றுளி
- கால் மாத்திரை
- பூனை

# சார்பெழுத்துக்களின் வகைகள்

**உயிர் மெய்**

- உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டு ஒலிகளை குறிப்பவை
- மெய் எழுத்துக்களுடன் உயிர் எழுத்துக்குரிய துணைக் குறிகள் இணைந்து உருவாகுபவை

க் + அ = க

# சார்பெழுத்துக்களின் வகைகள்

## உயிர் மெய்

- உயிர் எழுத்துக்களுடன் துணைக் குறிகள் சேரும் போது மெய் எழுத்துக்கள் புள்ளி நீங்கிய வடிவம் பெறுகின்றன.

த் + அ = த

# ஆய்தம்

மூன்று புள்ளி கொண்ட எழுத்து வடிவம்

ஃ

ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரை அளவில் ஒலிப்பதை முற்றாயுதம் என்போம்

அ ஃ து

தனிக் குற்றெழுத்து வல்லினஉகரம்

# அளபெடைகள்

உயிரளபெடை

ஒற்றளபெடை

**உயிரளபெடை** → நெட்டுயிர் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய இடங்களில் நீண்டு ஒலித்தல்.

**உயிரளபெடை**

நெட்டுயிர் அளபெடுப்பதற்கு அடையாளமாக அதன் இனவெழுத்து இடப்படும்.

தொழாஅள்

தொழ் ஆ அ ள்

**ஒற்றளபெடை**

**மெல்லின எழுத்துக்கள்** - ங், ஞ், ண், ந், ம், ன்

**இடையின எழுத்துக்கள்** - ய், வ், ல்,ள்

**ஆய்த எழுத்து** - ஃ

ஆகிய 11 எழுத்துக்களும் தமது **அரை மாத்திரையில் நின்றும் நீண்டு ஒலிப்பதற்கு** அடையாளமாக அதே மெய் அதன் பக்கத்தில் இடப்படும்.

இலங்கு - இலங்ங்கு

# தரப்பட்ட சொற்களை உயிரளபெடையா ஒற்றளபெடையா என வகைப்படுத்துக

அங்ங்கு

நசைஇ

பஞ்ஞ்சு

வெண்ண்பிறை

தழீஇ

படாஅ

தரப்பட்ட சொற்களை உயிரளபெடையா ஒற்றளபெடையா என வகைப்படுத்துக

உயிரளபெடை

த **ழீ இ**

ந **சை இ**

ப **டா அ**

ஒற்றளபெடை

வெ **ண்ண்** பிறை

ப **ஞ் ஞ்** சு

அ **ங் ங்** கு

# ஐ காரக் குறுக்கம்

ஐ காரத்தின் மாத்திரை அளவு 2 மாத்திரை

தன்னைச் சுட்டும் போது 2 மாத்திரையாக ஒலிக்கும்

சொற்களின் முதல்,இடை,கடை ஆகிய இடங்களில் குறில் போல் 1 மாத்திரையாக ஒலிப்பதை ஐ காரக் குறுக்கம் என்போம்.

## ஐ காரக் குறுக்கம்

| | |
|---|---|
| மொழிமுதல் | ஐயர் |
| மொழி இடை | வளையம் |
| மொழி கடை | பனை |

# ஔ காரக் குறுக்கம்

தன்னைச் சுட்டும் போது 2 மாத்திரையாக ஒலிக்கும்.

ஔ காரம் தனக்குரிய மாத்திரையில் நின்றும் குறுகி ஒலிப்பதை **ஔ காரக்** குறுக்கம் என்போம்.

ஔ காரத்தின் மாத்திரை அளவு 1 ஆகும்.

- ✓ ஔவையார்
- ✓ வௌவால்

# ம கரக் குறுக்கம்

ம கரத்தின் மாத்திரை அளவு **அரை**

ம கரம் தனது மாத்திரை அளவில் நின்றும் குறுகி ஒலிப்பதனை **ம கரக் குறுக்கம்** என்போம்.

**ன,ண அடுத்தும் வ கரத்துக்கு** முன்னும் வரும் மகரம் குறுகி ஒலிப்பதையே இலக்கணம் ம கரக் குறுக்கம் என்றது.

போன்ம் மருண்ம் தரும்வளவன்

# ஆய்தக் குறுக்கம்

புணர்ச்சியில் ல கர, ள கரங்கள் திரிந்து தோன்றும்

ஆய்தம் தனக்குரிய **அரை மாத்திரையில்** நின்றும் குறுகி ஒலிக்கும்.

இதனையே ஆய்தக் குறுக்கம் என்பர்.

அல் + திணை - அஃறிணை

## கீறிட்ட இடம் நிரப்புக

- மாத்திரை அளவைக் குறிப்பிடுக

- உயிர்மெய் நெடில் இரண்டு
- ஐ காரக் குறுக்கம் ......... ஒன்று
- ஆய்தக் குறுக்கம் ............ கால் மாத்திரை
- முற்றாயுதம் ..................... ஒன்று
- உயிரளபெடை..................... மூன்று
- ஒற்றளபெடை .............................. ஒன்று

# குற்றியலுகரம்

- இதழ் குவியாது உச்சரிக்கப்படும் உ கரம்
- உ கரம் குறுகி ஒலித்தல்
- குறுகி ஒலிக்கும் போது உ கரத்தின் மாத்திரை அரை
- தனிக் குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் பின்னே வல்லின மெய்களில் ஏறி வரும் உ கரம் குற்றியலுகரம் எனப்படும்.

கொக்கு பஞ்சு

## குற்றியலுகரத்தின் வகைப்பாடு

குற்றியலுகரத்தை அதற்கு முன்வரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு 6 வகையாக வகைப்படுத்தலாம்.

| | |
|---|---|
| வன்தொடர்க் குற்றியலுகரம் | பட்டு பந்து |
| மென் தொடர்க் குற்றியலுகரம் | பஞ்சு வண்டு |
| இடைத் தொடர்க் குற்றியலுகரம் | பெய்து நல்கு |

# குற்றியலுகரத்தின் வகைப்பாடு

குற்றியலுகரத்தை அதற்கு முன்வரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு 6 வகையாக வகைப்படுத்தலாம்.

உயிர்த் தொடர் குற்றியலுகரம் → வயிறு வரகு

நெடித் தொடர் குற்றியலுகரம் → காசு காடு

ஆய்தத் தொடர் குற்றியலுகரம் → எஃகு அஃது

## உ கரம் இதழ்குவிந்தும் , இதழ் குவியாதும் உச்சரிக்கப்படும் சொற்களை இனங்கண்டு வேறுபடுத்துக

| | | | | |
|---|---|---|---|---|
| உண்மை | குயில் | புதுமை | உறுதி | எழுது |
| முட்டை | எருமை | கதவு | ஒன்று | அது |
| இது | எண்ணு | குரு | இருமல் | பட்டு |

**இதழ் குவிந்து உச்சரிக்கப்படுபவை**

உண்மை, குயில், புதுமை,
உறுதி,முட்டை,எருமை,கதவு,
அது,இது,எண்ணு,குரு,இருமல்

**இதழ் குவியாது உச்சரிக்கப்படுபவை**

எழுது, ஒன்று ,பட்டு

# குற்றியலிகரம்

இ கரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும்.

**ய கரத்துக்கு முன்வரும்** குற்றியலுகரம் புணர்ச்சியில் **இ கரமாக திரியும்.**

நாகு + யாது - நாகியாது

தற்காலத் தமிழில் இவற்றின் பயன்பாட்டை காண முடியாது.

# எழுத்தின் பரம்பல்

- முதல்நிலை எழுத்து
- இடைநிலை எழுத்து
- இறுதிநிலை எழுத்து

# முதல் நிலை எழுத்துக்கள்

12 உயிர் எழுத்துக்களும் சொல்லாக்கத்தில் சொல்லின் முதலில் வருகின்றன.

வல்லின மெய்களில் க, ச, த, ப ஆகிய நான்கும் 12 உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வருகின்றன.

மெல்லின எழுத்துக்களில் ந,ம ஆகிய இரண்டும் 12 உயிர்களுடனும் சேர்ந்து மொழிக்கு முதலில் வருகின்றன.

வ , ய , ஞ ஆகிய மெய்கள் சில உயிர்களுடன் சேர்ந்து மொழிக்கு முதலில் வருகின்றன.

# முதல் நிலை எழுத்துக்கள்

## தற்கால வழக்கு

**ட , ற, ர, ல ஆகிய மெய்கள் பிற மொழிச் சொற்களில் முதலில் வருகின்றன.**

டம்பம், றக்கு, லட்டு, ரசிகன்

ஸ, ஷ, ஜ ஆகிய **கிரந்த எழுத்தக்களும்** பிற மொழிச் சொற்களில் மொழி முதலில் வருகின்றன.

**ஜனாதிபதி, ஷம்பு , ஸலாம்**

# இறுதிநிலை எழுத்துக்கள்

சொல்லாக்கத்தில் சொல்லின் இறுதியில் இடம் பெறுவது.

உயிர் எழுத்துக்களில் **எ, ஒ, ஔ** தவிர்ந்த ஏனையவை மொழி இறுதியில் இடம்பெறும்.

**ய, ர,ல ,வ,ழ,ள** ஆகிய இடையின எழுத்துக்களும் சொல்லாக்கத்தின் இறுதியில் வருகின்றன.

வல்லின மெய்கள் சொல்லாக்கத்தின் இறுதியில் வருவதில்லை.

ஸ்,ஜ, ஷ ஆகிய எழுத்துக்கள் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வருகின்றன.

புஷ் ரமேஸ்

# இடைநிலை எழுத்துக்கள்

சொல்லாக்கத்தில் சொல்லின் இடையில் எழுத்துக்கள் தனித்தோ பிற எழுத்துக்களுடன் இணைந்தோ இடம்பெறல் .

மெய் எழுத்துக்கள் சொல்லின் இடையில் இடம்பெறுவது **இடைநிலை மெய்மயக்கம்** எனப்படும்

# இடைநிலை எழுத்துக்கள்

உடன்நிலை மெய் மயக்கம்

வேற்றுநிலை மெய்மயக்கம்

# உடன்நிலை மெய்மயக்கம்

ர் ழ் தவிர்ந்த 16 மெய்களும் சொல்இடையில் இரட்டித்து வரும்

பச்சை - ப **ச் ச்** சை

அப்பா - அ **ப் ப்** ஆ

## வேற்றுநிலை மெய்மயக்கம்

**க,ச,த ,ப தவிர்ந்த 14 மெய்களும் சொல் இடையில் பிற மெய்களுடன் இணைந்து வரல்**

வெட்கம் - வெ ட் க் அ ம்

பயிற்சி - ப யி ற் ச் இ

# வேற்றுநிலை மெய்மயக்கம்

மூன்று மெய்கள் மயங்கி வரும் சொற்களும் காணப்படுகின்றன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சி | தே | ர் | ச் | ச் | இ |
| வாழ்க்கை | வா | ழ் | க் | க் | ஐ |
| ஈர்க்கு | ஈ | ர் | க் | க் | உ |

# எழுத்துக்களின் வகைகள்

- சுட்டெழுத்து
- வினாவெழுத்து
- இனவெழுத்து

## சுட்டெழுத்து

**ஒருவரை,ஒரு பொருளினை சுட்டிக் கூற பயன்படும் எழுத்து**

**அ இ உ**

**இது 2 வகைப்படும்**

**அகச்சுட்டு**

**சுட்டெழுத்து அகத்துறுப்பாக அமைவது**

அது , அவன் , இவன்

**புறச்சுட்டு**

**சுட்டெழுத்து புறத்துறுப்பாக அமைவது**

அவ்வீடு , இக்குதிரை

# வினாவெழுத்து

வினாப் பொருளைத் தருகின்ற எழுத்துக்கள் வினா எழுத்துக்கள் எனப்படும்.

**எ யா ஆ ஓ ஏ**

**அகவினா** – வினா எழுத்து அகத்துறுப்பாக வருதல்

**யார் எவன் எது**

**புறவினா** – வினா எழுத்து புறத்துறுப்பாக வருதல்

**எப்பொருள் எக்குதிரை**

# இனவெழுத்து

உயிரெழுத்துக்களுள் குறில் ஐந்துக்கும் நெடில் ஐந்தும்

ஐ காரத்துக்கு இ கரமும் ஔ காரத்துக்கு உ கரமும்

அ - ஆ

இ - ஈ

உ — ஊ

எ - ஏ

ஐ -இ

ஔ -உ

இனவெழுத்து
இல்லாத எழுத்துக்
கூட்டம்
இடையினம்

# பொருத்தமான விடையை தெரிவு செய்க

அகச்சுட்டாக அமைவது............. ஆகும்.

- இச்சிலை
- அவன்
- அவ்வீடு
- அம்மா
- உரல்

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

மொழி முதலில் மட்டும் இடம்பெறும் வினாவெழுத்து ...............ஆகும்.

- ஆ,ஒ
- ஏ, யா
- ஆ, ஏ
- யா,ஒ
- எ, யா

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

இனவெழுத்து இல்லாத எழுத்துக் கூட்டம் ..........ஆகும்.

- உயிரினம்
- மெய்யினம்
- வல்லினம்
- இடையினம்
- மெல்லினம்

# பொருத்தமான விடையை தெரிவு செய்க

உயிர் எழுத்துக்களின் பிறப்புக்குரிய இடம்...................... ஆகும்.

- மூக்கு
- வாய்
- தொண்டை
- மார்பு
- தலை

## பொருத்தமான விடையை தெரிவு செய்க

உடனிலை மெய்மயக்கம்.

அக்கா

மகிழ்ச்சி

கல்வி

நல்கு

சால்பு

# நன்றி